முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 668**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

28.07.2021, புதன்கிழமை

1. பேரானந்த கதி அருளும் பிரம்ம ஞானியே
பேராசானாய் வந்து உலகோருக்கு அருளுகின்ற அரங்கஞானியே
தரணியே உன் தர்மசக்திகொண்டு
தன்னார்வம் கொண்ட தொண்டர்படைகளைபெருக்கி
2. பெருக்கியே பேருலகம் ஞானமார்க்கம்
பேருலகம் ஞானயுகமாகும் எனகூறி
புகலுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே உந்தனுக்கு
கருத்தாக ஞான அறிவுரை ஆசியை கண்டுரைப்பேன் பிலவ நள்ளி திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கனின் கொள்கை தரணியை மாற்றும்
தவசி அரங்கன் தர்மமே இந்த உலகை காக்கும்
அண்ணலே என வேண்டி வருபவர்க்கு
அரங்கன் அருளும் நிழலும் ஆக்கம் தரும்
4. தருகின்ற அரங்கன் தர்மத்தின் பலத்தால்
தரணியே தனித்துவம் காணக்கூடும்
முருகப்பெருமான் என் சக்தியாக இயங்கும்
முழுமைபெற்ற ஞானி அரங்கன் சொல்செயல்கள் அனைத்தும்
5. அனைத்தும் கலியுகத்தில் வேதமாக்கப்படும்
அரங்கன் சீடர்கள் என வருகின்ற மக்கள் அனைத்துபேருமே
வரம்கூடி கலியுகத்தில் ஞானிகள் ஆக்கப்படுவர்
வல்லமைபட அரங்கன் ஞானவழிகளில் தீட்சை ஏற்று
6. தீட்சை ஏற்று தர்மத்தை செய்துகொண்டு உயர்தொண்டாக
தொடர்ந்து வரும் மக்கள் அனைத்து பேருமே
இடரின்றி இந்த கலியுகத்தில் காப்பு பெற்று
இனிபிறவாத பெரும்பேறு என்கின்ற ஞானத்தை அடையக்கூடும்
7. கூடவே அரங்கனை தொடர்ந்து வாரீர்
குவலயத்தை மாற்றி மகிழ்வு பெறுவீர்
நாடெங்கிலும் சரவணச்சுடரேற்றி ஞான வழிபாடு பெருக
நன்மைகொண்ட ஞானயுகமாக கலியுகம் சடுதி மாறும்

ஞான அறிவுரை ஆசி விளக்கம் முற்றே

–சுபம்–